Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 154 /2011**

**Deposition of witness for: PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மல்லிகா | **Father/Husband Name** | : | ராமலிங்கம் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **14.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

நான் வையாபுரிபட்டியில் அசா1 ஆன எனது மகளுடன் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 எனது மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகள் அசா1 தனலெட்சுமியை 1ம் எதிரி கணேசனுக்கு சுமார் 15 வருடத்திற்கு முன் திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்திற்கு முன் சுமார் ரூ.50000/—யை நானும், எனது வீட்டுக்காரரும் சேர்ந்து எதிரி கணேசன், அவர் அம்மா, அப்பாவை வைத்து ரொக்கமாக கொடுத்தோம். எனது மகளுக்கு திருமணத்தின்போது சுமார் 25 பவுன் நகையும், 1,1/2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் எனது மகளுக்கு செய்தோம். திருமணம் முடிந்து எனது மகளும், 1ம் எதிரி கணேசனும், மாமியார், மாமனாருடன் குமுட்ராம்பட்டியில் குடியிருந்து வந்தார்கள். எனது மகளுக்கு திருமணத்தின் பயனாக ஒரு மகன் பிறந்துள்ளான். தற்போது அசா1ன் மகனை நானும், எனது மகளும்தான்

எங்கள் பராமரிப்பில் வளர்த்து வருகிறோம். எனது மகள் அணிந்திருந்த 5 பவுன் நகையை 1ம் எதிரி கணேசன், அசா1 ஆன எனது மகளிடமிருந்து எடுத்து சென்று விஜயன் என்பவரிடம் கொடுத்திருந்தார். அதனால் எனது மகள் அசா1ற்கும், 1ம் எதிரி கணேசனுக்கும் தகராறு ஏற்பட்டது. இந்நிலையில் 1ம் கணேசனின் தாய் மாமன் ராஜமூர்த்தி அழைத்து, பேசி அறிவுரை கூறி அனுப்பி வைத்தார். மேலும் எதிரி கணேசன் நீ அணிந்துள்ள நகை பித்தளை என்று சொல்லிவிட்டு கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் நகையும் அறுத்துக்கொண்டு போய்விட்டார், இதனை நாங்கள் மீண்டும் ராஜமூர்த்தியிடம் சொல்லி பஞ்சாயத்து பேசி எதிரியுடன் அனுப்பிவைத்தார். ( இதை சொல்லும்போது சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளித்தார் ). இந்நிலையில் எனது மகள் 5 மாத கர்ப்பிணியாக இருந்தபோது ஏதோ பிரச்சனை ஏற்பட்டு எனது மகள் அசா1 குமுட்ராம்பட்டியிலிருந்து தெக்கூரில் உள்ள நாத்தனார் மகேஷ்வரி வீட்டிற்கு சென்றுள்ளார். என் மகள் அசா1 என்னிடம் தெக்கூரில் உள்ள மகேஷ்வரி வீட்டில் இருக்கிறார் என்ற தகவலை பின்னர் தெரிந்து நானும், எனது வீட்டுக்காரரும் தெக்கூர் சென்று எனது மகளை பார்த்தோம். என் மகள் என்னிடம் நான் கர்ப்பிணியாக உள்ளேன், இங்குதான் இருப்பேன் என்று கூறியதும், நாங்களும் பிள்ளை தான் முக்கியம் என்று அங்கேயே இருக்க சொன்னோம். 8 மாத கர்ப்பிணியாக இருக்கும்போது நான் மாணிக்கம் மகன் சேகர் வீட்டில் இருப்பதாகவும் என்னிடம் சொல்லி நான் இனிமேல் குமுட்ராம்பட்டியில் இருக்கமாட்டேன் என்னை அழைத்து சென்றுவிடுங்கள் எனது உயிருக்கு ஆபத்து என்று சொன்னார். நாங்கள் எனது மகளுக்கு அறிவுரை சொல்லி தல தீபாவளிக்கு அழைத்து வருவதாக சொன்னோம். சொன்னதை அடுத்து நாங்கள் தல தீபாவளிக்கு

அழைத்து சென்றோம். இந்நிலையில் எதிரி கணேசன் தாய்மாமன் என்னிடம் வந்து சிங்கம்புணரியில் 1ம் எதிரி வைத்துள்ள கம்யூட்டர் கடைக்கு முன்பணம் ரூ.5000/- கொடுத்தார். தல தீபாவளி முடித்து எனது மகளை எதிரியின் வீட்டிற்கு அனுப்பிவைத்த பின்னர் சுமார் 1 வாரம் கழித்து அங்கு ஏதோ பிரச்சனை ஏற்படவும், எனது மகள் எங்களிடம் அங்கிருந்து அழைத்து செல்லுமாறு கூறியுள்ளார். ஆனால், எனது வீட்டுக்காரர் ராமலிங்கம் என்னிடம் அசா1 தனலெட்சுமியை அழைத்து வர வேண்டாம் என்று சொன்னார், ஆனால் நான் என் மகள் என்னிடம் பசி பொறுக்க முடியவில்லை என்று சொல்லியதால் நேராக சென்று நான் எனது மகளை அழைத்து வந்தேன். எனது மகளுக்கு குழந்தை பிறந்தும் ஆஜர் எதிரிகள் யாரும் பார்க்க வரவில்லை. எனது மகள் அசா1யை எதிரிகள் பெண் என்றும் பார்க்காமல் 25 பவுன் நகையை பெற்றுகொண்டார்கள், இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

**( எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை ).**